# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## July 13, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. **தென் சீனக் கடலை சீனா உரிமை கோர முடியாது என அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், பிரிட்டன் மற்றும் மேற்கு ஆசிய நாடுகள் மீண்டும் உறுதிப்படுத்தின.**

i. தென் சீனக் கடலை சீனா உரிமை கோருவது சட்ட விரோதம் என நெதர்லாந்து தலைநகர் தி ஹேக்கில் ஐ.நா. கடல்சார் சட்ட உடன்படிக்கையின் கீழ் அமைக்கப்பட்ட தீர்ப்பாயம் கடந்த 2016, ஜூலை 12-இல் தீர்ப்பளித்தது. இதுவே இறுதியான தீர்ப்பு என்றும், இது சட்ட அதிகாரத்தைக் கொண்டது எனவும் அந்தத் தீர்ப்பாயம் தெரிவித்தது.

ii. இந்தத் தீர்ப்பு வெளியாகி 10 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், அதை வரலாற்றுச் சிறப்புமிக்கது என வரவேற்ற அமெரிக்கா, பிரிட்டன், 27 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய யூனியன் மற்றும் சில மேற்காசிய நாடுகள் தென் சீனக் கடலில் சீனாவின் ஆதிக்கத்தை நிராகரிப்பதை மீண்டும் உறுதிப்படுத்தின.

iii. இருப்பினும், இந்தத்தீர்ப்பு சட்ட விரோதமானது எனக் குற்றஞ்சாட்டிய சீனா, இது தங்களை கட்டுப்படுத்தாது என்றும் தெரிவித்தது.

iv. முன்னதாக, தென் சீனக் கடலில் தொடர்ச்சியாக ஏற்பட்ட மோதல்களைத் தொடர்ந்து கடந்த 2013-இல் சமரச பேச்சுவார்த்தைக்கு பிலிப்பின்ஸ் அழைப்பு விடுத்தது. ஆனால், இதற்கு சீனா ஒப்புக்கொள்ளவில்லை. அதைத் தொடர்ந்து, கடந்த 2016-இல் சீனாவுக்கு எதிராக தீர்ப்பாயம் தீர்ப்பளித்தது.

v. அமெரிக்க கருத்தை ஏற்காத சீனா:

- இந்தத் தீர்ப்புக்கு சீனா கட்டுப்பட வேண்டும் என அமெரிக்கா பல ஆண்டுகளாக வலியுறுத்தி வருகிறது. இதை பொருட்படுத்தாத சீனா தென் சீனக் கடலில் தனது ராணுவக் கப்பல்கள் மூலம் அடிக்கடி ரோந்தில் ஈடுபடுவது, கடற்படைப் பயிற்சிகள் மேற்கொள்வது போன்ற நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளது.
- உலகளவில் மிக முக்கிய வர்த்தக வழித்தடமாகக் கருதப்படும் இந்தப் பகுதியில் வியத்நாம், மலேசியா, புரூணே, தைவான் மற்றும் பிலிப்பின்ஸ் உள்ளிட்ட நாடுகளுடன் சீனா அடிக்கடி மோதலில் ஈடுபட்டு வருகிறது.

vi. 170 நாடுகள் கையொப்பம்:

- 1994-இல் அமலுக்கு வந்த ஐ.நா. கடல்சார் சட்ட உடன்படிக்கையில் இந்தியா, ஜப்பான், அமெரிக்கா, சீனா, கனடா, ஜெர்மனி, இத்தாலி, ஆஸ்திரேலியா உள்ளிட்ட 170 நாடுகள் கையொப்பமிட்டுள்ளன.

## 2. ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மீண்டும் மூடியிருப்பதால், கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு கப்பல்களின் போக்குவரத்து பாதிக்கப்படும் அபாயம் உருவாகியுள்ளது.

i. உலகில் கச்சா எண்ணெய்க் கப்பல்கள், எரிவாயு கப்பல்கள் அதிகம் செல்லும் பகுதிகளில் ஒன்றாக ஓமன் மற்றும் ஈரான் இடையே உள்ள ஹோர்முஸ் நீரிணை திகழ்கிறது. அமெரிக்கா, இஸ்ரேலுடனான போரின்போது, அந்த நீரிணையை ஈரான் சுமார் 4 மாதங்களாக மூடியது. இதனால் அந்த நீரிணை வழியே செல்வதற்காக கச்சா எண்ணெய், எரிவாயுவை ஏற்றிக்கொண்டு வந்த பல்வேறு நாடுகளின் கப்பல்கள் நடுக்கடலில் பல மாதங்கள் முடங்கின. இதனால் உலகின் பல நாடுகளில் பெட்ரோல், டீசல், எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டு விலை உயர்வுக்கு வழிவகுத்தது.

ii. இந்நிலையில், பாகிஸ்தான் மற்றும் கத்தார் நாடுகளின் மத்தியஸ்தத்தால் ஈரான் - அமெரிக்கா இடையே கடந்த மாதம் இடைக்கால அமைதி ஒப்பந்தம் கையொப்பமானது. இதையடுத்து, ஹோர்முஸ் நீரிணையை உலக நாடுகளின் கப்பல்களின் போக்குவரத்துக்கு ஈரான் திறந்துவிட்டது. இதனால் உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்தது. எனினும், ஹோர்முஸ் நீரிணையில் ஈரான் அனுமதித்த வழித் தடத்தில் செல்லாமல் மாற்றுப் பாதையில் சென்ற 3 கப்பல்கள் மீது கடந்த வாரம் திடீர் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத்தாக் குதலை நடத்தியது யாரென தெரியாத நிலையில், இதன் பின்னணியில் ஈரான் இருப்பதாகக் கூறி, அந்நாட்டிலுள்ள ராணுவ இலக்குகள் உள்ளிட்டவை மீது அமெரிக்கா மீண்டும் தொடர் தாக்குதல்களை நடத்தியது. இதற்கு ஈரானும் பதிலடி கொடுத்ததால், மோதல் மீண்டும் மூண்டது.

## 3. இங்கிலாந்தில் நடைபெறும் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டியான விம்பிள்டனில், மகளிர் ஒற்றையர் பிரிவில் செக் குடியரசின் லிண்டா

**நோஸ்கோவா சாம்பியன் கோப்பை வென்றார்.**

i. போட்டித்தரவரிசையில் 9-ஆம் இடத்திலிருந்த அவர், 10- ஆம் இடத்திலிருந்த சக செக் குடியரசு வீராங்கனை கரோலின் முசோவாவை வீழ்த்தினார். இதன் மூலமாக அவர் முதல்முறையாக கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றார்.

**4. உலகக் கோப்பை கால்பந்து வரலாற்றிலேயே முதல்முறையாக ஃபிஃபா தரவரிசையில் முதல் 4 இடங்களில் இருக்கும் அணிகளே, தற்போது அரையிறுதிக்கும் வந்துள்ளன. தரவரிசையில் தற்போது ஆர்ஜென்டீனா, ஸ்பெயின், பிரான்ஸ், இங்கிலாந்து ஆகியவை முறையே முதல் 4 இடங்களில் உள்ளன.**

**5. நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரையொட்டி, வரும் ஜூலை 19-ஆம் தேதி அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.**

i. வரும் ஜூலை 20 முதல் ஆகஸ்ட் 13 வரை, நாடாளுமன்ற மழைக் கால கூட்டத்தொடர் நடைபெற உள்ளது. இதையொட்டி, புது தில்லியில் ஜூலை 19-ஆம் தேதி அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

ii. கூட்டத்தொடரின்போது மசோதாக்கள், கொள்கை நடவடிக்கைகள் சார்ந்த தனது செயல்திட்டம் குறித்து, அனைத்துக் கட்சி கூட்டத்தில் மத்திய அரசு சுருக்கமாக எடுத்துரைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளையில், கூட்டத்தொடரில் தாங்கள் எழுப்ப உள்ள விவகாரங்கள் குறித்து எதிர்க்கட்சிகள் எடுத்துரைக்க வாய்ப்புள்ளது.

iii. கூட்டத்தொடரில் மத்திய அரசுக்கு விரிவான செயல்திட்டம் உள்ளது. அத்துடன் கடுமையான குற்றங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பிரதமர், மத்திய அமைச்சர்கள் மாநில முதல்வர்கள் கைது செய்யப்பட்டு தொடர்ந்து 30 நாள்கள் சிறையில் இருந்தால், அவர்களைப் பதவி நீக்கம் செய்யும் 130-ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதா உள்பட பல முக்கிய மசோதாக்கள், கூட்டத்தொடரில் விவாதத்துக்கு எடுத்துகொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**6. சமூகத்தை மேம்படுத்த தனது வாழ்நாளை அர்ப்பணித்தவர் என சுதந்திர போராட்ட வீரர், சமூக சீர்திருத்தவாதி மற்றும் நாயர் சேவை சங்க**

**(என்எஸ்எஸ்) நிறுவனர் மன்னத்து பத்மநாபனுக்கு குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் புகழாரம் சூட்டினார். புது தில்லியில் மன்னத்து பத்மநாபன் சிலை மற்றும் நினைவு மண்டபத்தை அவர் திறந்து வைத்தார்.**

7. **திபெத்தில் பிரம்மபுத்திரா நதியில் சீனா உருவாக்கி வரும் பெரும் அணையின் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து சீன புவியியலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

i. இந்தியாவின் அருணாசல பிரதேச மாநிலத்தையொட்டிய எல்லையிலிருந்து சுமார் 50 கிலோமீட்டர் தொலைவில் இந்த அணைக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

ii. இந்நிலையில், உலகின் மிகப்பெரும் நீர்மின் திட்டமாக கருதப்படும் இந்த அணையின் கீழ் உள்ள புவித்தக்கடுப்பிளவுக்கோட்டு கட்டமைப்பு நிலைத் தன்மையை பாதிக்கக் கூடும் என சீன புவியியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

iii. குறிப்பாக ஹிமாலய பிராந்தியத்தில் உள்ள புவியின் மேல் பரப்பில் சிறு பிளவு ஏற்பட்டாலும் அது நீர்மின் திட்டத்தின் உள்கட்டமைப்பை கடுமையாக பாதிக்கும் என ஹாங்காங் கைச் சேர்ந்த செளத் சீனா மார்னிங் போஸ்ட் செய்தித்தாள் வியாழக்கிழமை வெளியிட்ட ஆய்வுக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டது.

iv. முன்னதாக இந்தப் பிளவை பைஜன் பிளவு என குறிப்பிட்டு படிமப் பாறையியல் மற்றும் டெத்தியன் புவியியல் என்ற சீன மொழி மாத இதழில் கடந்த மாதம் கட்டுரை வெளியானது. மேலும், இந்தப் பிளவு பிளிஸ்டோசின் காலம் தொட்டு சுமார் 9,500 ஆண்டுகளாக இருப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டது.

v. 30 கோடி மக்கள் பலன்பெறும் வகையில் ஆண்டுக்கு 300 பில்லியன் கிலோவாட் மின்சார உற்பத்தியை மேற்கொள்ளும் நோக்கில் கடந்த ஆண்டு ஜூலையில் ரூ.15.9 லட்சம் கோடி (167.8 பில்லியன் டாலர்) மதிப்பில் திபெத்தில் இந்த அணையின் கட்டுமானப் பணிகளை சீனா தொடங்கியது.

vi. அருணாசல பிரதேசத்துக்குள் நுழைந்து பின் வங்கதேசத்துக்கு பாயும் முன் பிரம்மபுத்திரா நதியின் 'யு' வளைவுக்கு அருகிலுள்ள ஹிமாலய மலைத் தொடரில் பல்வேறு பொறியியல் சவால்களுக்கு மத்தியில் அணையை சீனா

கட்டி வருகிறது.

vii. முக்கியமாக, உலகின் சுவராக கருதப்படும் திபெத்திய பீடபூமியானது அதன்கீழே உள்ள டெக்டானிக் தகடுகளால் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படும் பகுதியாக விளங்கி வருகிறது. இதில் அணை கட்டுவதால் பாதிப்பு ஏற்படும் என சீன புவியியலாளர்களே எதிர்க்கும் சூழலில் அதை சீன அரசு கண்டு கொள்ளவில்லை.

viii. மாறாக புதிய அணையால் பிரம்மபுத்திரா நதி பாயும் பகுதிகளில் பேரிடர் மீட்பு எளிதாகும் என்ற வாதத்தை சீன அரசு தொடர்ந்து முன்வைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

**8. ரஷியாவிடம் இருந்து இதுவரை இல்லாத புதிய உச்சமாக, ஜூன் மாதத்தில் இந்தியா ரூ.59,900 கோடிக்கும் மேல் கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்துள்ளது. இதுகுறித்து எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான ஆய்வு மையம் (சிஆர்இஏ) வெளியிட்டுள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:**

i. ரஷியாவிடம் இருந்து மிக அதிகமாக கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடாக சீனா உள்ளது. கடந்த ஜூன் மாதத்தில் அந்நாடு ரூ.79,500 கோடிக்கு கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்துள்ளது. இதற்கு அடுத்து 2-ஆவது அதிகபட்சமாக ரஷியாவிடம் இருந்து ரூ.59,900 கோடிக்கு இந்தியா கச்சா எண்ணெய், நிலக்கரி, எண்ணெய் பொருள்களை இறக்குமதி செய்துள்ளது. இது கடந்த மே மாதத்துடன் ஒப்பிடுகையில் 34 சதவீதம் அதிகம். அதேபோல் இதுவரை இல்லாத அளவுக்கு புதிய உச்சம்.

ii. இந்தியா தனது இறக்குமதியை அதிகரித்ததன் மூலம், ரஷியாவின் கச்சா எண்ணெய் ஏற்றுமதி ஜூன் மாதத்தில் 14 சதவீதம் அதிகரித்துள்ளது. அதே நேரத்தில், மலிவு விலையில் விற்பதால், கச்சா எண்ணெய் விற்பனை மூலம் கிடைக்கும் வருவாயில் 8 சதவீதம் ரஷியாவுக்கு மாதந்தோறும் இழப்பு ஏற்படுகிறது. அதேபோல் ஒட்டுமொத்தமாக உலக நாடுகளுக்கு ரஷியாவின் கச்சா எண்ணெய் ஏற்றுமதி 7 சதவீதம் அதிகரித்த போதிலும், கச்சா எண்ணெய் விற்பனை மூலம் கிடைக்கும் வருவாய் ஒரு சதவீதம் குறைந்துள்ளது.

iii. ரஷியாவிடம் இருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய்யை, இந்தியாவில் உள்ள ரிலையன்ஸ், இந்தியன் ஆயில், நயாரா, பாரத்

பெட்ரோலியம் நிறுவனங்கள் தங்களது சுத்திகரிப்பு ஆலைகளில் சுத்திகரித்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன. அந்த நாடுகளில் ரஷியா மீது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ள ஐரோப்பிய யூனியன், ஆஸ்திரேலியா, பிரிட்டன், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும் அடங்கும். இதுபோல ரூ.4,019 கோடிக்கு இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது.

iv. இதேபோல் ரஷியாவிடம் இருந்து இறக்குமதி செய்த கச்சா எண்ணெய்யை துருக்கி, புரூணே, ஜார்ஜியா ஆகிய நாடுகளும் சுத்திகரித்து, ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன என்று சிஆர்இஏ தெரிவித்துள்ளது.

9. **எத்தில் ஆல்கஹால் சேர்மங்கள் அதிகமாக உள்ள மருந்துகளை விற்பனை செய்வதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அதன்படி, அங்கீகரிக்கப்பட்ட மருத்துவரின் பரிந்துரைச் சீட்டு இல்லாமல் அதனை விற்பனை செய்யக் கூடாது.**

i. விதிகளை மீறுவோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கும் வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, அதுதொடர்பான அறிவிக்கையை மத்திய மருந்து கட்டுப்பாட்டு அமைப்பு, அரசிதழில் வெளியிட்டுள்ளது.

ii. இதுவரை 'ஷெட்யூல் கே' எனப்படும் பிரிவின் கீழ் தளர்வுகளுடன் விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டு வந்த 12 சதவீத ஆல்கஹால் கொண்ட மருந்துகள், இனி 'ஷெட்யூல் ஹெச் 1' எனும் வகைப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. வாய்வழியாக உட்கொள்ளும் அனைத்து மருந்துகளும் இந்த புதிய விதிகளுக்கு உட்பட்டவை என வரையறுக்கப்பட்டுள்ளது.

iii. அத்தகைய மருந்துகளை விற்பனை செய்யும் மருந்தகங்கள், அதற்கான பதிவேடுகளை முறையாகப் பராமரிப்பதும் புதிய விதிகளின்படி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இருமல், சளி மற்றும் வேறு சில பாதிப்புகளுக்கு பயன்படுத்தும் மருந்துகளில் குறிப்பிட்ட அளவு எத்தில் ஆல்கஹால் சேர்க்கும்போது அவை நிவாரணியாக செயல்படுகின்றன. சில உற்பத்தியாளர்கள் அதிக எத்தில் ஆல்கஹாலைப் பயன்படுத்தி மருந்துகளை தயாரிப்பதும், அவை போதைக்காக பயன்படுத்தப்படுவதும் மத்திய மருந்து கட்டுப்பாட்டு அமைப்பின் கவனத்துக்கு வந்தது.

iv. இதையடுத்து, மருந்துகளில் ஆல்கஹால் பயன்பாடு மற்றும் விற்பனை

நடவடிக்கைகளில் கட்டுப்பாடுகளை விதிக்க முடிவு செய்யப்பட்டது. அதற்கான சட்டத் திருத்தத்தை மேற்கொள்ள ஏதுவாக அதுகுறித்த கருத்துருக்கள் பெறப்பட்டன.

v. அதனடிப்படையில் 12 சதவீதத்துக்கும் மேல் ஆல்கஹால் கலந்த மருந்துகளை இனி தன்னிச்சையாக வாங்கவோ, விற்கவோ முடியாது என திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள நிலையில், அடுத்த ஆறு மாதங்களில் புதிய விதிகள் நடைமுறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

vi. அதன்படி, 2027 ஜனவரி முதல் புதிய கட்டுப்பாடுகள் அமலுக்கு வரவுள்ளன. இந்த விதிகள், நோயாளிகளுக்குத் தேவையான அத்தியாவசிய மருந்துகளைப் பெறுவதில் சிக்கலை ஏற்படுத்தாது என்றும் அதேவேளையில், மருந்துகளை தவறாக பயன்படுத்துவது முற்றிலும் தடுக்கப்படும் என்றும் துறைசார் அதிகாரிகள் விளக்கமளித்துள்ளனர்.

**10. பிரதமர், மத்திய அமைச்சர்கள், மாநில முதல்வர்கள், மாநில அமைச்சர்கள் ஆகியோர் கடுமையான குற்றத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ், தொடர்ந்து 30 நாள்கள் சிறையில் இருந்தால், அவர்களை நிரந்தரமாகப் பதவியில் இருந்து நீக்காமல், நீதிமன்ற வழக்கின் முடிவு வெளியாகும் வரை, அவர்களைத் தற்காலிகமாகவே பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று 130-ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதாவை ஆராயும் நாடாளுமன்ற கூட்டுக் குழு பரிந்துரைத்துள்ளது.**

i. பிரதமர், மத்திய அமைச்சர்கள், மாநில முதல்வர்கள், மாநில அமைச்சர்கள் ஆகியோர் கடுமையான குற்றத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ்,கைது செய்யப்பட்டு 30 நாள்களில் ஜாமீன் கிடைக்காமல் சிறையில் இருந்தால், அவர்களைப் பதவிநீக்கம் செய்ய 130- ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதா வழிவகுக்கிறது. அவ்வாறு கைது செய்யப்பட்டு தொடர்ந்து 30 நாள்கள் சிறையில் உள்ளவர்கள், தாமாக முன்வந்து பதவி விலகாவிட்டால், சட்டப் படி 31-ஆவது நாள் அவர்களைத் தானாகப் பதவியில் இருந்து நீக்க மசோதா வழியமைக்கிறது.

ii. கடந்த ஆண்டு மக்களவையில் மத்திய அரசு அறிமுகம் செய்த இந்த மசோதாவை ஆராய, பாஜக எம்.பி.அபராஜிதா சாரங்கி தலைமையில் 31 பேர் கொண்ட நாடாளுமன்ற கூட்டுக் குழு அமைக்கப்பட்டது.

iii. இந்த மசோதா பாஜக அல்லாத எதிர்க்கட்சிகள் ஆளும் மாநில அரசுகளை நிலைகுலையச் செய்வதற்கான கருவி என்று எதிர்க் கட்சிகள் குற்றஞ்சாட்டிய நிலையில், மசோதாவை ஆராயும் கூட்டுக் குழுவில் இருந்து பெரும்பாலான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் விலகிவிட்டனர்.

iv. இந்நிலையில், கூட்டுக் குழு தயாரித்துள்ள வரைவு அறிக்கையில், மசோதாவில் சில திருத்தங்களை செய்வதற்கான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

v. அந்தப் பரிந்துரைகளின் விவரம்:

- கடுமையான குற்றத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ் பிரதமர், மத்திய அமைச்சர்கள், மாநில முதல்வர்கள், மாநில அமைச்சர்கள் தொடர்ந்து 30 நாள்கள் சிறையில் இருந்தால், அவர்களை நிரந்தரமாகப் பதவியில் இருந்து நீக்காமல், நீதிமன்ற வழக்கின் முடிவு வெளியாகும் வரை, அவர்களைத் தற்காலிகமாகவே பதவியில் இருந்து நீக்க வேண்டும்.
- இதில் கடுமையான குற்றங்கள் என்பது 5 ஆண்டுகள் அல்லது அதற்கும் அதிகமான காலம் சிறைத் தண்டனை கொண்ட குற்றங்களாக இருக்க வேண்டும்.
- தற்காலிக பதவி நீக்கத்துக்கு வழிவகுக்கும் குற்றங்களைத் தெளிவாக அடையாளம் காணும் வகையில், அந்தக் குற்றங்களின் பட்டியல் அடங்கிய தனி அட்டவணை சட்டத்தில் இடம்பெற வேண்டும்.
- ஒருவேளை அவர்கள் குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டாலோ அல்லது அந்தக் குற்றச்சாட்டை நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தும் சட்ட நடவடிக்கையை குறிப்பிட்ட காலத்துக்குள் முன்னெடுத்துச் செல்லவில்லை என்றாலோ, அவர்களைத் தற்காலிகமாகப் பதவி நீக்கம் செய்தது தானாக முடிவுக்கு வரவேண்டும்.
- உச்சநீதிமன்ற உத்தரவுகளுக்கு ஏற்ப, உயரிய அரசியல் சாசன பதவிகளில் உள்ளவர்களுக்கு எதிரான வழக்குகள் விரைவு அல்லது சிறப்பு நீதிமன்றங்களில் நடைபெற வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- இந்தப் பரிந்துரைகள் ஏற்கப்பட்டால், மசோதாவில் அது சார்ந்த அதிகாரபூர்வ திருத்தங்களை மக்களவையில் மத்திய அரசு தாக்கல் செய்யும்.

**11. உள்நாட்டிலேயே கப்பல் கட்டும் துறையில் இந்தியாவின் விரைவான முன்னேற்றம் மற்றும் உலகளாவிய கடல்சார் சக்தியாக உருவெடுக்க கடற்படை வலிமையை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம்.**

i. கடற்படைப் பாதுகாப்பில் வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கற்கள்

- வரலாற்று ரீதியாக, இந்தியாவின் பாதுகாப்புப் படைகள் உபகரணங்களுக்காக வெளிநாடுகளை பெரிதும் சார்ந்திருந்தன; இதனால் சர்வதேச ஆயுதச் சந்தையில் இந்தியா ஒரு முக்கிய வாடிக்கையாளராகத் திகழ்ந்தது.
- ஐஎன்எஸ் விக்ராந்த்' (INS Vikrant) விமானம் தாங்கி போர்க்கப்பல் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்தது; இது கடற்படைத் தொழில்நுட்பத்தில் 'ஆத்மநிர்பர்தா' (சுயசார்பு) நிலையை நோக்கிய மாற்றத்தை உணர்த்தியது.
- கடந்த 10 ஆண்டுகளில், இந்தியக் கடற்படை தனது படையில் 33 போர்க்கப்பல்களையும் ஏழு நீர்மூழ்கிக் கப்பல்களையும் இணைத்துள்ளது.
- புதிதாகச் சேர்க்கப்பட்ட இந்த 40 கப்பல்களில், ஒன்று மட்டுமே வெளிநாட்டிலிருந்து பெறப்பட்டது; மற்ற அனைத்தும் உள்நாட்டிலேயே கட்டப்பட்டன என்பது குறிப்பிடத்தக்க வரலாற்றுச் சிறப்பாகும்.
- அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களான 'ஐஎன்எஸ் அரியந்த்' (INS Arihant) மற்றும் 'ஐஎன்எஸ் அரிகாட்' (INS Arighat) ஆகியவற்றின் உருவாக்கம் இந்தியாவின் தொழில்நுட்ப வளர்ச்சியைப் பறைசாற்றுகிறது.

ii. புவியியல் மையங்கள் மற்றும் உற்பத்தி நிலையங்கள்

- கொல்கத்தா (மேற்கு வங்கம்): கொல்கத்தாவைச் சேர்ந்த பொதுத்துறை நிறுவனமான 'கார்டன் ரீச் ஷிப் பில்டர்ஸ் அண்ட் இன்ஜினியர்ஸ்' (GRSE), சமீபத்தில் மூன்று நவீன கப்பல்களை - 'ஐஎன்எஸ் அக்ரே' (INS Agray), 'ஐஎன்எஸ் துனகிரி' (INS Dunagiri - போர்க்கப்பல்கள்) மற்றும் 'ஐஎன்எஸ் சந்தாயக்' (INS Sandhayak - ஆய்வுக் கப்பல்) - உருவாக்கி ஒப்படைத்தது.
- மும்பை (மகாராஷ்டிரா): மும்பையில் உள்ள 'மசாகான் டாக் ஷிப் பில்டர்ஸ் லிமிடெட்' (MDL) நிறுவனம், பிரம்மாண்டமான 'ஐஎன்எஸ் மகேந்திரகிரி' (INS Mahendragiri) கப்பலை வடிவமைத்து உருவாக்கியது. கடற்படையின் தற்போதைய 135 போர்க்கப்பல்களில் 39 கப்பல்களை

இந்நிறுவனமே உருவாக்கியுள்ளது.

- விசாகப்பட்டினம் (ஆந்திரப் பிரதேசம்): விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற விழாவில், பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் 'ஐஎன்எஸ் மகேந்திரகிரி' கப்பலை அதிகாரப்பூர்வமாக கடற்படையின் சிறப்புப் பிரிவுக்கு அர்ப்பணித்தார்.
- துறைமுக நவீனமயமாக்கல்: இந்தியாவில் அரசு நிர்வகிக்கும் 12 துறைமுகங்களில் உள்கட்டமைப்பை மேம்படுத்தவும் நவீனமயமாக்கவும் 'சாகர்மாலா' (Sagarmala) திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

iii. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப விவரக்குறிப்புகள்

- ஐஎன்எஸ் மகேந்திரகிரி: இக்கப்பல் 6,670 டன் எடையைக் கொண்டது மற்றும் மணிக்கு அதிகபட்சமாக 28 கடல் மைல் (நாட்ஸ்) வேகத்தில் செல்லக்கூடியது.
- ஸ்டெல்த் (Stealth) மற்றும் ரேடார்: எதிரிகளின் ரேடார் மூலம் எளிதில் கண்டறிய முடியாதவாறு, சிறப்பு 'ஸ்டெல்த்' தொழில்நுட்பத்துடன் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ஆயுதங்கள்: இக்கப்பலில் 'பிரம்மோஸ்' (BrahMos) உள்ளிட்ட அதிவேகத் தாக்குதல் ஏவுகணைகள் பொருத்தப்பட்டுள்ளன. * பன்முகப் பாதுகாப்பு: இது வான், நிலம் மற்றும் நீருக்கடியில் இருந்தும் தாக்குதல்களை எதிர்கொள்ளும் மற்றும் தாக்குதல்களைத் தொடுக்கும் அறிவியல் திறனைக் கொண்டுள்ளது.
- உள்நாட்டுத் தயாரிப்பு: கடற்படையில் புதிதாக இணைக்கப்பட்ட மூன்று கப்பல்கள் 75% உள்நாட்டுப் பொருட்களைப் பயன்படுத்தி கட்டப்பட்டுள்ளன.

iv. உலகளாவிய நிலை மற்றும் பொருளாதாரப் புள்ளிவிவரங்கள்

- உலகளாவிய கப்பல் கட்டும் சந்தையில் இந்தியா தற்போது 1.2% பங்களிப்பை மட்டுமே கொண்டுள்ளது. இதற்கு மாறாக, சீனா முதலிடத்திலும் (47%), அதைத் தொடர்ந்து தென் கொரியா (29%) மற்றும் ஜப்பான் (17%) ஆகிய நாடுகள் உள்ளன.
- கடல்சார் வர்த்தக அளவில் கிரீஸ் (17.8%), சீனா (12.8%) மற்றும் ஜப்பான் (10.8%) போன்ற நாடுகள் முன்னணியில் உள்ள நிலையில், இந்தியாவின் பங்கு 1.8% ஆக உள்ளது.
- உலகளவில் இயங்கும் கப்பல்களில் 0.77% மட்டுமே இந்தியக் கொடியின்

கீழ் இயங்குகின்றன.

- தற்போது, இந்தியாவில் சுமார் ₹1.5 லட்சம் கோடி மதிப்பிலான 60 பெரிய கப்பல்கள் கட்டப்பட்டு வருகின்றன.

v. எதிர்கால இலக்குகள் மற்றும் கொள்கை மாற்றங்கள்

- இந்தியா தற்போது 135 போர்க்கப்பல்களை இயக்குகிறது; 2035-ஆம் ஆண்டிற்குள் இத்தொகையை 250 போர்க்கப்பல்களாக உயர்த்த பிரதமர் நரேந்திர மோடி இலக்கு நிர்ணயித்துள்ளார்.
- 2025–26 காலகட்டத்திற்கு, உள்நாட்டு கப்பல் கட்டும் துறையை வலுப்படுத்த அரசு ஆரம்பத்தில் ₹25,000 கோடியை ஒதுக்கியது; இதை ₹70,000 கோடியாக உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.
- உள்நாட்டு கப்பல் கட்டும் தொழில், எஃகு, மின்னணுவியல், உணரி (sensor) தொழில்நுட்பம், மென்பொருள் மற்றும் கனரக உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் வளர்ச்சியையும் வேலைவாய்ப்பையும் ஊக்குவிக்கிறது.
- ஒரு முன்னணி கடல்சார் சக்தியாகவும் வளர்ந்த நாடாகவும் உருவெடுக்கும் தனது திறனை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள, கப்பல் கட்டும் தளங்களுக்கு கூடுதல் முதலீடுகளை ஈர்ப்பதில் இந்தியா தாமதிக்கக்கூடாது.

## 12. நிலவின் மேற்பரப்பிற்கு இந்தியாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க பயணம்.

i. இந்தியாவின் விண்வெளித் திட்டத்தின் வரலாற்று வளர்ச்சி

- இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (ISRO) 1962-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- அடுத்த ஆண்டிலேயே இந்தியாவின் முதல் ராக்கெட் ஏவப்பட்டது. வரலாற்று ரீதியாகப் பார்க்கையில், ஆரம்பகால ராக்கெட்டுகளுக்கான பாகங்கள் மிதிவண்டி மூலம் கொண்டு செல்லப்பட்டன; அக்காலத்தில் இது பிற நாடுகளால் கேலிக்குள்ளாக்கப்பட்டது.
- 1999-இல் இந்திய அறிவியல் கழகமும் (Indian Academy of Sciences), 2000-இல் இந்திய விண்வெளிப் பயணச் சங்கமும் (Astronautical Society of India) நிலவுப் பயணத் திட்டத்திற்கான பரிந்துரைகளை முன்வைத்தன.
- ஆகஸ்ட் 15, 2003 அன்று (இந்தியாவின் 56-வது சுதந்திர தினம்), அப்போதைய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் "சந்திரயான்"

(சமஸ்கிருதத்தில் "நிலவு வாகனம்" என்று பொருள்) திட்டத்தைத் தொடங்குவதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்.

ii. சந்திரயான் திட்டங்களின் காலவரிசை

- சந்திரயான்-1 (2008): அக்டோபர் 22, 2008 அன்று ஶ்ரீஹரிகோட்டாவிலிருந்து ஏவப்பட்ட இத்திட்டம் ஒரு மைல்கல் வெற்றியாக அமைந்தது; ஏனெனில், இது நிலவின் மேற்பரப்பில் நீர் மூலக்கூறுகளைக் கண்டறிந்தது.
- சந்திரயான்-2 (2019): இதில் 'ஆர்பிட்டர்' (orbiter) வெற்றிகரமாகச் செயல்பட்டாலும், 'விக்ரம்' லேண்டர் (lander) இறுதி நேரத்தில் தொடர்பை இழந்து, மென்மையான தரையிறக்கத்தை (soft landing) மேற்கொள்ளத் தவறியது.
- சந்திரயான்-3-ன் சாதனை: முந்தைய தோல்வியிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையில், ஜூலை 14, 2023 அன்று சந்திரயான்-3 ஏவப்பட்டது; 41 நாள் பயணத்திற்குப் பிறகு அது நிலவில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது.

iii. புவியியல் உண்மைகள்: இலக்கு மற்றும் ஏவுதளம்

- இத்திட்டம் ஶ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து LVM3 ராக்கெட் மூலம் ஏவப்பட்டது.
- சந்திரயான்-3 ஆகஸ்ட் 23, 2023 அன்று நிலவின் தென் துருவத்திற்கு அருகில் தரையிறங்கியது.
- இப்பகுதி புவியியல் ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது; ஏனெனில், இங்கு சூரிய ஒளி ஒருபோதும் படராத ஆழமான பள்ளங்கள் உள்ளன. எதிர்கால மனிதக் குடியிருப்புகளுக்கும் ஆராய்ச்சிகளுக்கும் அவசியமான உறைந்த பனிக்கட்டி இப்பகுதிகளில் இருப்பதாக விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.
- இந்தச் சாதனையின் மூலம், நிலவில் தரையிறங்கிய நான்காவது நாடாகவும் (ரஷ்யா, அமெரிக்கா மற்றும் சீனாவிற்குப் பிறகு), நிலவின் தென் துருவத்திற்கு அருகில் தரையிறங்கிய வரலாற்றின் முதல் நாடாகவும் இந்தியா திகழ்கிறது.

(iv) அறிவியல் கூறுகள் மற்றும் கண்டுபிடிப்புகள்

- இத்திட்டத்தில் 'விக்ரம்' லேண்டர் (Vikram Lander) மற்றும் 'பிரக்யான்' ரோவர் (Pragyan Rover) ஆகியவை பயன்படுத்தப்பட்டன.
- சந்திரயான்-2 திட்டத்தில் ஏற்பட்ட சவால்களைக் கருத்தில் கொண்டு,

இஸ்ரோ (ISRO) விஞ்ஞானிகள் லேண்டரில் மாற்றங்களைச் செய்தனர்; இதன் மூலம் நிலவின் வெப்பநிலை, நில அதிர்வு செயல்பாடுகள் மற்றும் பிளாஸ்மா ஆகியவற்றை அளவிட முடிந்தது.

- நிலவில் கந்தகம் (Sulphur) இருப்பதை பிரக்யான் ரோவர் உறுதிப்படுத்தியது. மேலும், அலுமினியம், கால்சியம், இரும்பு மற்றும் சிலிக்கான் போன்ற தனிமங்களையும் அது கண்டறிந்தது.
- இத்திட்டம் முழுமையாக சுமார் ₹600 கோடி செலவில் முடிக்கப்பட்டது; உலகளாவிய தரநிலைகளின்படி இது மிகவும் சிக்கனமானதாகக் கருதப்படுகிறது.

iv. விண்வெளி ஆராய்ச்சியில் எதிர்கால வாய்ப்புகள்

சந்திரயான்-3-ன் வெற்றி, பல்வேறு லட்சியமிக்க எதிர்காலத் திட்டங்களுக்கு வழிவகுத்துள்ளது:

- ககன்யான் (Gaganyaan): மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் இந்தியாவின் முதல் திட்டம்.
- சந்திரயான்-4 (Chandrayaan-4): நிலவின் மண் மாதிரிகளைப் பூமிக்குக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்ட திட்டம்.
- சுக்ரயான் (Shukrayaan) & ஆதித்யா-L1 (Aditya-L1): முறையே வெள்ளி கிரகம் மற்றும் சூரியனை ஆய்வு செய்வதற்கான திட்டங்கள்.
- சமுத்ராயான் (Samudrayaan): மனிதர்களை ஆழ்கடலுக்கு அனுப்பும் ஒரு ஆழ்கடல் ஆய்வுத் திட்டம்.

ஜூலை 14 என்பது ஒரு ஏவுதல் நிகழ்வைக் குறிக்கும் தேதி மட்டுமல்ல; அது இந்தியாவின் அறிவியல் முன்னேற்றம், தன்னிறைவு மற்றும் தேசியப் பெருமையின் அடையாளமாகவும் திகழ்கிறது.